


யாழ்/கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும்
அரேஸ் குடியிருப்பு புஜக்குடியிருப்பு
இறுதி வாழ்விடமாகவும் கொண்ட

# அமரர் இராசதுரை - புவேனேஸ்வரன்

அவர்களின் இறைபதம் குறித்த

# நினைவு மலர்

28.05.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வாழ்வாங்கு வாழ்ந்து
பிள்ளைகளுக்கு வாழ்வளித்து
வீழும்போதும் புகழுடன் வீழ்ந்த
தந்தையே, தெய்வமே காடுமேடு
நடந்து கல்லையும் கனியாக்கி
வீடுவாசல் தேட விடிவெள்ளியாய்
அமைந்த தெய்வமே பெற்ற
கோயிலே பாடுபட்ட உங்களுக்கு
எங்களின் படையல். கூடு பிரிந்த
உங்களுக்கு எங்களின் கண்ணீர்
மலராகப் படைக்கின்றோம்
ஏற்றிடையா தந்தையே.

மகன்மார்
திலீபன்,திஸ்யாந்தன் (தீசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவில்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1942 | 2016 |
| 12 | 04 |
| 15 | 28 |

அமரர்

## இராசதுரை புவனேஸ்வரன்

வளமான துர்முகி ஆண்டிலே அயலவர் கூடிய நிற்க
அமரபக்க சப்தம திதியில் இறைவனுடன்
இணைந்திட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



## தோத்திரப் பாக்கள்

**விநாயகர் துதி**

**திருச்சிற்றம்பலம்**

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுகத் தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்கு பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

## திருப்புகழ்

இருவினையின் மதி மயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவு தரிசனையை என்றற் கருள்வாயே
தெரிதமிழை உதவு சங்கப் புலவோனே
சிவனருளும் முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியும் அன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

### தேற்றம்

முடிசார்ந்த மன்னரும் மற்றுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பாராய் வெந்து மண்ணாவதுங் கண்டு மின்னுமந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னிளம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்ற யறிவாரிலையே

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாண்டவர்க்கும் இறைவாபோற்றி

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர் திரு இராசதுரை
## புவனேஸ்வரன்
## அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்திரு நாட்டிலே வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு கொக்குவில் என்ற ஊரில் சைவகுலத்தைச் சேர்ந்த இராசதுரை கணேஸ்வரி என்பவர்களுக்கு இரண்டாவது மகனாக அவதரித்தார் புவனேஸ்வரன். இவர்களுடன் லோகேஸ்வரன், இராஜேஸ்வரன், கணேஸ்வரன் மற்றும் காலம்சென்ற வினோதினி, நகுலேஸ்வரன், பத்மினி, ராஜினி, ஜெகதீஸ்வரன், இந்திரேஸ்வரன் ஆகியோர் உடன் பிறப்புகளாக அவதரித்தார்கள்.


இவர் தன்னுடைய இளமை கல்வியை கொக்குவில் இந்து கல்லூரியில் கற்றார். இவர் செம்மண் வளமுடைய வசாவிளானை சேர்ந்த சைவ குலத்தைச் சேர்ந்த கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் மூன்றாவது புதல்வியான இராஜேஸ்வரியை திருமணம் செய்து வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் இல்லற இன்ப வாழ்கையில் மூன்று புதல்வர்களை பெற்றெடுத்து சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் வாழ்க்கை இனிதே இன்பமாக வாழ்ந்து வந்த காலப்பகுதியில் இடப்பெயர்வு காரணமாக தனது சொந்த இடமான கொக்குவில்லில் வசித்து வந்தார். இவரின் கடைசி மகன் திருமணம் செய்து வெளிநாடு சென்றுவிட்டார். அதன் பின்னர் .அவர் தனது மூத்த மகனின் வீட்டில் இருப்பதற்காக கைவேலி புதுக்குடியிருப்பில் வந்து இருந்தார். இவர் மிகவும் சந்தோசமாக இருந்ததை பொறுக்காத இறைவன் தன்னுடன் எடுத்துக் கொண்டார்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

மண நாளாம் அன்று மறக்க முடியுமா என்னால்
மாங்கல்ய பாக்கியம் தந்த மணாளனே
மனதார நாம் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து பார்க்கின்றேன்
மன்மதா என் கண்ணாளா ஏன் இப்படி செய்தாய்.
இப்பூமிதனில் என்னுடன் வாழ பூமித்தாய்க்கு
பொறுக்கவில்லையோ

## மகன்மார் புலம்பல்

அன்புடன் அரவணைத்து எம்மை எல்லாம்
ஆசையாய் ஊட்டி விட்டு
அரவணைத்த எம் அப்பாவே!
எம்மை எல்லாம் விட்டு செல்ல
எப்படியப்பா உங்களுக்கு மனம் வந்தது

## மருமக்கள் புலம்பல்

மாமா என் மா மேதை நீங்கள் - எமக்கு
மாமனிதராக தெரிந்தீர்கள் - எம்மை
தந்தையைப் போல் பாசமழை பொழிந்தீர்கள்
தாயைப் போல் அன்புகாட்டி அரவணைத்தீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதர சகோதரிகள் புலம்பல்

எம்மனதையெல்லாம் கொள்ளை கொண்ட சகோதரனே
எம்மை விட்டு எங்கு சென்றீர் ஐயாவே
தம்பி என்ற பொழுதும் அண்ணா என்ற பொழுதும்
தயங்காது ஓடி வந்து எம் குறைகேட்பீர்
தரணியெங்கும் புகழ் பரப்பி தீர்க்கமுடன் வாழ்ந்தாயே
தவறி விட்டார் எம் சகோதரன் என கேட்டபோது
தரணியிலே நாமில்லை உம்மை தேடி திரிகின்றோம்
திராணியற்று நாம் நிற்கின்றோம் - தலைநிமிர்ந்து
எம்மிடம் ஓடிவந்து விடு எக்காலமும் உம்மை விட்டு
எங்கும் தொலைக்கமாட்டோம்

## மைத்துணிமார் புலம்பல்

எமக்கு மைத்துணருக்கு ஓர் எடுத்துக்காட்டாய் இப்புவியில்
எம்மையெல்லாம் அன்பால் அரவணைத்தீரே
இன்று சொர்ப்பனம் கூட காணாமல் நீங்கள்
இறைவனடி சென்றீரே இப்புவியிலே
வாழப்பிடிக்கவில்லையா எமக்கு மைத்துணருக்கு பலனில்லை
வாழப்பழக்கி விட்டு வாழாமல் சென்றது ஏன்
எம்மீது பாசமழையெல்லாம் பொழிந்து பாசத்தில் நனையவிட்டு
ஏன் இன்று கண்ணீரில் நனைய விட்டு வேடிக்கை பார்க்கிறீர்

## பேரப்பிள்ளைகள் துயர்

அப்பப்பா அப்பப்பா என்றால் உங்கள்
அரவணைப்பு உடன் கிடைத்திடும் எமக்கு
அன்புடன் கதைசொல்லி தாலாட்டி சீராட்டி
அன்பு முத்தம் பொழிந்து அணைத்திடுவீர்கள் எம்மை
எக்காலத்தில் நீங்கள் கிடைப்பீர்கள் அப்பப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 15-12-1942

இறப்பு 28-04-2016



## இராசதுரை புவனேஸ்வரன்

([illegible])

கோபுரம் சாய்ந்ததே
கொடுந்துன்பம் நேரிட்டதே
எங்கள் கோலங்கள் அழிந்ததுவே
ஏது கதி
தாங்க முடியாத துயரத்தில்
தவிக்குதையா எம் நெஞ்சு
அமைதியாக துயிலும் தங்கள்
ஆன்மா இறைபதம் சேர
இறைவனை இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பம்

பதிப்பு - [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு"

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய எமது குடும்பத்தின் குல விளக்கான தந்தையின் துயர நிகழ்வு வேளையில் எங்கள் துயரினில் பங்கு கொண்டு ஆறுதல் வார்தைகளால் அரவணைத்த அனைத்து உள்ளங்களுக்கும் இவ் வேளையில் எமது குடும்பத்தின் சார்பாக நன்றியைக் கூறிக் கொள்கின்றோம். துண்டு பிரசுரங்களில் நினைவுகளை மீட்டவர்கள், தொலைவில் இருந்து தொலைபேசிகள் மூலம் இரங்கலை தெரிவித்தவர்கள், அனைத்து கிரியைகளிலும் கலந்து கொண்டவர்கள், உணவும் தேனீரும் தந்து உபசரித்தவர்கள், துயருற்று இருந்த வேளையில் அனைத்து வேலைகளிலும் பங்கெடுத்து உதவி புரிந்தவர்கள், நண்பர்களையும் இவ் வேளையில் நன்றி மறவாது நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

நன்றி.

*ஆக்கியோன்*
*மகன்மார்*
*திலிபன், திஸ்யாந்தன்(தீஸன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**இராசதுரை + கணேஸ்வரி**

லோகேஸ்வரன்
புவனேஸ்வரன்
இராஜேஸ்வரன்
கணேஸ்வரன்
● வினோதினி
நகுலேஸ்வரன்
பத்மினி
ராகினி
ஜெகதீஸ்வரன்
இந்திரேஸ்வரன்

ரங்கநாயகி (கனடா)
நல்லம்மா (யாழ்)
சாந்தினி (அவுஸ்ரேலியா)
ஞானமாணிக்கம் (யாழ்)
பரமேஸ்வரி (மட்டக்களப்பு)
● சச்சிதானந்தம் (யாழ்)
ஆனந்தகுமார் (கொழும்பு)
பாமினி (கனடா)
கலா (கனடா)

**கந்தையா + பொன்னம்மா**

கிருஸ்ணபிள்ளை
● சரஸ்வதி
இராஜேஸ்வரி
கனகமணி
புஸ்பராணி

கனகம்மா
சிவசம்பு
சுந்தரலிங்கம்
எலோகேஸ்வரன்

**திலீபன் + தர்சினி**

இளஞ்சோழன்
நிரோயன்

**● திருவதனன்**

**● அமரர்**

**திஸ்யாந்தன்(தீசன்) + சாமினி**

திவிசா (கனடா)
திவ்வியா (கனடா)
திவித்தா (கனடா)
திவ்யாணி (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலகநியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



பொன்னாச்சி பதிப்பகம் புதுக்குடியிருப்பு 021 2061628

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org